**சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப.,**

ந.க.எண்.4075/2020/பே2

நாள்.19.11.2021

பொருள்: பணியாளர்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சேலம் மாவட்டம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தமிழ்நாடு அமைச்சுப் பணி – 2018–19 மற்றும் 2019–20– இளநிலை உதவியாளர் உள்ளடக்கிய தொகுதி IV பணியிடங்கள் தெரிவு செய்யப்பட்ட 8 பணியாளர்கள் சேலம் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிபுரிந்து வருவது – பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களது கடிதம் எண்.2484/PSD–I/2020, நாள்.26.05.2020.
2. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.4075/2020/பே2, நாள்.04.08.2020.
3. தொடர்புடைய பேரூராட்சிகளின் செயல் அலுவலரிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள்.
4. தொடர்புடைய ஆவணங்கள்.

******

**ஆணை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணியிடத்தினை உள்ளடக்கிய தொகுதி IVல் அடங்கிய தமிழ்நாடு அமைச்சு பணியிடங்களுக்கு, 2018–19 மற்றும் 2019–20ஆம் ஆண்டிற்கான காலியிடங்களுக்கு நடத்தப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்று, பார்வை 1–இல் கண்டுள்ள சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய, செயலாளரின் கடிதத்தின் மூலம் சேலம் மாவட்ட பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2–இல் காணும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி, கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 8 (எட்டு) பணியாளர்களுக்கும் பணியிடம் வழங்கப்பட்டு, அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்

அட்டவணை

| வ. எண் | பணியாளர்களின் பெயர்மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | கேசவன்.ஆ<br>வரித்தண்டலர் | நங்கவள்ளி | 18.09.2020 மு.ப. | 18.09.2020 மு.ப. |
| 2 | பாலகுமார்.சே<br>வரித்தண்டலர் | இளம்பிள்ளை | 10.08.2020 மு.ப. | 10.08.2020 மு.ப. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | ராஜா.ஆ<br>இளநிலை உதவியாளர் | ஓமலூர் | 10.08.2020 மு.ப. | 10.08.2020 மு.ப. |
| 4 | சிந்துஜா.மு<br>இளநிலை உதவியாளர் | அரசிராமணி | 06.08.2020 மு.ப. | 06.08.2020 மு.ப. |
| 5 | விஜயலட்சுமி.கி<br>இளநிலை உதவியாளர் | பேளூர் | 14.08.2020 மு.ப. | 14.08.2020 மு.ப. |
| 6 | இந்துமதி.வெ<br>இளநிலை உதவியாளர் | பணமரத்துப்பட்டி | 10.08.2020 மு.ப. | 10.08.2020 மு.ப. |
| 7 | பாலசுப்ரமணியன்.க<br>வரித்தண்டலர் | வீரகனூர் | 10.08.2020 மு.ப. | 10.08.2020 மு.ப. |
| 8 | அபிபுல்லாரகுமான்.மு<br>வரித்தண்டலர் | இடங்கணசாலை | 10.08.2020 மு.ப. | 10.08.2020மு.ப. |

இதனை தொடர்ந்து பார்வை 3ல் காணும் தொடர்புடைய செயல் அலுவலர்களின் கடிதங்களில் மேற்காண் பணியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கையோ தண்டனைகளோ பணி முறிவோ ஏதும் இல்லை என்பதால், அவர்களது பணியினை வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்க கோரி கருத்துருக்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வழியாக தேர்வு செய்து பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் பணியினை அவர்தம் பணியில் சேர்ந்து கொண்ட நாள் முதல் வரன்முறை செய்யப்பட வேண்டும் என்பதாலும் தொடர்புடைய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கருத்துருக்களின் அடிப்படையிலும் அட்டவணையில் கண்டுள்ள விபரப்படியான பணியாளர்களின் பணியினை அவர்தம் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் வாயிலாக ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர்களின் பணிபதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொண்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலருக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
சேலம்.–1.

பெறுநர்

தொடர்புடைய இளநிலை உதவியாளர்கள் மற்றும் வரித்தண்டலர்கள்,
(சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் மூலமாக)

நகல்:

1. பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
2. மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.
3. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சேலம் மாவட்டம்.
4. செயல் அலுவலர், நங்கவள்ளி, இளம்பிள்ளை, ஓமலூர், அரசிராமணி, பேளூர், பணமரத்துப்பட்டி, வீரகனூர், மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிகள்,